

மக்களவை சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டுள்ள ஓம் பிர்லாவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வாழ்த்து தெரிவித்து, மலர்க் கொத்து மற்றும் வாழ்த்து மடலை வழங்கினார்.

### கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க

# இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் கடிதம்!

புதுடெல்லி, ஜூன் 29-

மீனவர்களின் நலன் காக்க ஒன்றிய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது மற்றும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவது தொடர்பாக கடந்த சில தினங்களாக ஒன்றிய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியிருந்தார். இதற்கு நேற்று பதில் கடிதம் எழுதியுள்ள ஒன்றிய அமைச்சர், “மீனவர்கள் பிரச்சனை தொடர்பாக நீங்கள் ஜூன் 19, 24 மற்றும் 25ம் தேதிகளில் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. ஜூன் 26ஆம் தேதி யின் விவரங்களின்படி, 34 இந்திய மீனவர்கள் இலங்கையில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆறு பேர் தண்டனை பெற்று தண்டனை சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள்.

கொழும்புவில் உள்ள இந்திய தூதரகம், யாழ்பாணத்தில் உள்ள துணைத் தூதரக அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு, கைது செய்யப்பட்டவர்களை முன்கூட்டியே விடுவிக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடந்த 10 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். மீனவர்களின் நலன் காக்க ஒன்றிய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்திய மீனவர்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்’ என்று கூறியுள்ளார்.

### ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை

# பழமை மாறாமல் புதுப்பித்து மற்ற அரசு அலுவலகங்களுக்கு பயன்படுத்தலாம்!

## சட்டப் பேரவையில் கடலூர் கோ.ஐயப்பன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 29,

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தற்போது புதியதாக வேறு இடத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை பழமை மாறாமல் புதுப்பித்து மற்ற அரசு அலுவலகங்களுக்கு பயன்படுத்தலாம் என்று சட்டப் பேரவையில் ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கடலூர் கோ.ஐயப்பன் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் கடலூர் தொகுதி எம்.எல்.ஏ. கோ.ஐயப்பன் பேசியதாவது:-

வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களை செய்வதில்லை, அவர்கள் தாங்கள் செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள் என்ற புகழ்பெற்ற வாசகம் ஒன்று உண்டு. அதற்கு உதாரணமாக நான் மூன்று தலைவர்களைப் பார்க்கின்றேன். ஒன்று தலைவருக்கெல்லாம் தலைவராக விளங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், இரண்டு நம்முடைய தமிழகத்தை முன்னேற்ற பாதையில் அழைத்து சென்று கொண்டிருக்கின்ற, நம்முடைய திராவிட மாடல் தலைவர், நாயகர் நம் முதலமைச்சர் அவர்கள், இன்னொருவர் நெஞ்சுக்குநீதியைநினைவூட்டிய கழகத் தலைவர், ஆதவனில் தொடங்கி மாமன்னனாக நிலைத்தவர், நாளைய மாமன்னனாய் தொடரவிருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றே உங்களால் செய்ய முடிந்ததை ஒருபோதும் நாளைவரை தள்ளிப்போடாதீர்கள் என்று Benjamin Franklin என்ற அறிஞர் சொல்லியிருக்கின்றார்கள்.

அந்தக் கூற்றுப்படி நம் முதல்வர் அவர்கள் இன்றையதினம் நம் மக்களுக்கு என்னென்ன நலத் திட்டங்களை வழங்க முடியுமோ அவற்றை நாளைவரை ஒருபோதும் தள்ளிப்போடுவது இல்லை.

இன்றையதினமே அவரால் முடிந்ததை முடியாததை, சொன்னதை சொல்லாததை திறம்பட செய்து தமிழர்களுக்காக, தமிழ் மக்களுக்காக, ஏழைகளுக்காக இன்னல் களைகின்ற ஒரு அரசராக, தமிழக முதல்வராக இருந்து செய்து கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே அவரை வணங்கி, எங்களுடைய மாவட்ட கழகச் செயலாளர் - வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, அவை முன்னவர் அமைச்சர் அவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, பேரவைத் துணைத் தலைவராகிய உங்களையும் மற்றும் எனக்கு பேச வாய்ப்பளித்த அன்பிற்குரிய அரசு கொறடா அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்துனை பேரையும் வணங்கி, இன்றைய கால கட்டத்தில் மிகவும் பெரிதாகப் பேசப்படுகின்ற, தமிழகத்திலே எங்கு சுற்றி வந்தாலும் அந்தப் பெருமையை தேநீர் விடுதிகளிலே, சாலை ஓரங்களிலே, பல்வேறு பகுதிகளிலே தலைவர் முதல்வர் அவர்களுடைய பெருமையை எங்கு சென்றாலும் விமர்சித்துக்கொண்டிருக்கின்ற, பேசிக்கொண்டிருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்கின்ற, முக்கியமான போக்குவரத்துத் துறை, இன்று தமிழகத்திலே சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது.

#### மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து!

எள் என்றால் எண்ணெய்யாக நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை வழங்கி, போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில் முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் மீது கொண்டுள்ள அக்கறையை நாம் நன்றியுடன் எண்ணிப்பார்க்க வேண்டும். உதாரணமாக மகளிருக்காக கட்டணமில்லா பயணம் அறிமுகப்படுத்தியதன்மூலம் தமிநாட்டிலுள்ள அத்துனை சகோதரிகளின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நம் தலைவர் சிம்மாசனமிட்டு அமர்ந்திருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.



மாணவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரிலே Metro Rail திட்டம், சென்னையிலே Metro Rail திட்டத்தின் இரண்டாம் கட்டம், விரைவுப் போக்குவரத்து பேருந்துகளில் தொடர்ந்து பயணிக்கும் பயணிகளுக்கு சிறப்பு சலுகை என்று பல்வேறு சலுகைகளை போக்குவரத்துத் துறையின் மூலமாக நமக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

#### எம்.எல்.ஏ.க்கள் பேருந்துகள் வழித்தடங்கள்!

முதல்வர் அவர்கள் இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களா, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களா என்று பாராமல், சட்டமன்றத்திலே இருக்கின்ற 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் மூலமாக ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பப்படி ஒரு பேருந்தை வழங்கி சிறப்பு செய்த ஓர் அரசு இந்த முதல்வர் அவர்களுடைய அரசு. அமைச்சர் அவர்கள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு பேருந்தை வழங்கி, அதை நீங்கள் எங்கெல்லாம் செயல்படுத்துகின்றீர்களோ, எந்த வகையில் அந்த பேருந்தை நீங்கள் செலுத்த விரும்புகிறீர்களோ, அந்த வகையில் செலுத்துங்கள் என்று நம்முடைய குறைகளை இன்று நிவர்த்தி செய்து சட்டமன்ற உறுப்பினருக்கெல்லாம் பெருமை சேர்த்த ஓர் அரசாக இன்று தமிழக அரசு இருந்து கொண்டிருக்கின்றது.

#### புதிய பேருந்துகள் இயக்கம்!

அந்தவகையிலே நாம் அனைவரும் அவருக்கு நன்றி சொல்கின்ற விழாவாக இந்த போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை தினத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகரித்துவரும் செலவுகள் மற்றும் நிதி பற்றாக்குறை இருந்தபோதிலும், 2018 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலேயே பேருந்து கட்டணம் இன்றும் தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

2018 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை பேருந்து கட்டணங்கள் தமிழகத்திலே உயர்த்தப்படவில்லை. மற்ற மாநிலங்களிலே ஆந்திராவிலே, கேரளாவிலே மற்றும் கர்நாடகாவிலே பார்க்கின்ற போது மிக மிக குறைந்த கட்டணமாக தமிழகத்திலே பேருந்து கட்டணம் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 382 புதிய வழித்தடங்கள் மற்றும் தட விரிவாக்கங்களில் 715 பேருந்துகளை அரசு தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, முந்தைய ஆட்சிக் காலத்தில் 491 வழித்தடங்களில் பேருந்துகளை இயக்காமல் முந்தைய அரசு நிறுத்தியது.

இன்று அமைச்சர் அவர்கள் 601 பேருந்துகளை மீண்டும் இயக்கி சாதனை செய்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே தலைவர் முதல்வராக பொறுப்பேற்ற பிறகு அரசு 2024-2025 ஆம் நிதியாண்டிற்கு 7,182 புதிய டீசல் பேருந்துகள், 500 மின்சார பேருந்துகள் உட்பட 7,682 பேருந்துகளை அறிமுகம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இதுவரை 1,037 பேருந்துகள் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. 1,500 புதுப்பிக்கப்பட வேண்டிய பேருந்துகளில் இதுவரை 881 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் மக்கள் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

இன்றுவரை பேருந்திலே ஓட்டை இல்லை; உடைசல் இல்லை; ஓட்டை வழியாக விழுந்து மரணங்கள் இல்லை என்ற நிலையை அமைச்சர் அவர்கள் தளபதியாருடைய கரத்தை வலிப்படுத்துகின்ற விதமாக செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலே இன்று சாலையானாலும் சரி, பேருந்து ஆனாலும் சரி, மக்கள் எளிதாக, சொகுசாக பயணிக்கக்கூடிய அந்தவகையிலே பொதுமக்கள் அத்தனைப்பேரும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மகளிர் மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நமது முதலமைச்சர் அவர்களுடைய அரசு 7.5. 2021 அன்று மகளிர் விடியல் பயணம் திட்டத்தைத் தொடங்கி இதுவரை மகளிர் 490 கோடியே 73 இலட்சம் பயணங்களையும், திருநங்கைகள் 29 கோடியே 62 இலட்சம் பயணங்களையும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் துணையர் 4 கோடியே 16 இலட்சம் பயணங்களையும் மேற்கொண்டுள்ளனர். விடியல் பயணம் திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு மகளிரும் மாதத்திற்கு சுமார் 888 ரூபாய் சேமிப்பு என்ற அந்தத் திட்டத்தை முதல்வர் அவர்கள் தந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த விடியல் பயணம் திட்டத்திற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் 6,945 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கியிருக்கின்றது.

ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இன்றும் மிக மிடுக்கோடு யார் வந்தாலும், ஒரு தடவை அங்கு உள்ளே சென்று பார்க்க வேண்டுமென்று தோன்றும் அந்தக் கட்டடம் மிகவும் பழமையான கட்டடம். அந்தக் கட்டடம் அப்படியே இருக்கின்றது. புதிய ஆட்சியர் அலுவலகம் கட்டப்பட்டு, மாற்றப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கடலூர் தலைநகரமாக விளங்கியது. அந்த காலத்திலே கட்டப்பட்ட மிக, மிக பழமையான கட்டடம். அந்தக் கட்டடத்தை அருள்கூர்ந்து அதே பழமை மாறாமல் அதை பிதுப்பித்து மற்ற அலுவலகங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்தெல்லாம் வருகின்ற tourists அதையெல்லாம் சென்று பார்வையிட்டு, படமெடுத்து செல்கின்றார்கள். அந்தவகையிலே அதை சீர்படுத்தி செய்து தர வேண்டுமென்று அமைச்சர் பெருமக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் கடலூர் பகுதியில் கண்மாய்கள், கால்வாய்கள் இல்லை. பெண்ணையாறு, கெடிலம், மலட்டாறு என்ற 3 ஆற்றின் படுகைகள் வெள்ள காலங்களிலே, மழை காலங்களிலே கடலில் கலக்கின்ற நிலை உள்ளது. அதனால் அதிக நீர் வந்து, அங்கே உடைப்புகள் ஏற்பட்டு, பல்வேறு சேதங்கள் ஏற்படுகின்ற நிலை உள்ளது. அதற்காக, ஆறுகளிலே retaining wall அமைத்துத்தந்தால், தொடர்ந்து பேரிழப்பிலிருந்து காப்பாற்றக்கூடிய நிலையை உருவாக்க முடியும். ஆதலால், தயவுசெய்து அதை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எப்படியெல்லாம் 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பேருந்து வழங்கி முதல்வர் சிறப்பு செய்தார்களோ, அதேபோன்று இங்கே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 10 கோரிக்கைகளை தந்து அனைவருக்கும் சமமாக திராவிட முன்னேற்றக் கழக ஆளும் கட்சிக்கு மாத்திரமல்ல, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த சலுகையைத் தந்து சிறப்பைத் தந்து உங்களுக்கெல்லாம் பெருமையைத் தேடித் தந்திருக்கின்றார்கள். சாதி மதம் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற ஏழைகள் வாழ்வதற்காக இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற. . .

முதல்வர் அவர்களுடைய ஆட்சி தொடர வேண்டுமென்று மக்கள் இன்றல்ல, தொடர்ந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் தருகின்ற இந்த கோரிக்கைகளை பதிவேட்டில் பதிவு செய்து என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அனைவருக்கும் வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

இவ்வாறு கோ.ஐயப்பன் பேசினார்.

### சாதி ஒழிப்புப் போராளி – தியாகி இமானுவேல் சேகரனார் பிறந்தநாளை

# இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு விழாவாக அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## மக்கள் விடுதலைக் கட்சி தலைவர் சு.க. முருகவேல் ராஜன் அறிக்கை!

மதுரை, ஜூன் 29-

மக்கள் விடுதலைக் கட்சி நிறுவனர் - தலைவர் சு.க.முருகவேல் ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சட்டப்பேரவையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை மானியக்கோரிக்கையில்அமைச்சர் வெள்ளக்கோவில் சுவாமிநாதன் அவர்கள் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் சாதி, ஏற்றத் தாழ்வுகளை களைந்துசமூகசமத்துவமின்மையை போக்கி ஒரு சமூக நீதி சமத்துவ சமுதாயத்தை படைக்க அஞ்சாமல் போராடி தன் உயிரை தியாகம் செய்த தியாக சீலர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் பெருமையை போற்றுகிற வகையில் அவரது பிறந்த நாளான அக்டோபர்09இராமநாதபுரம் மாவட்ட அளவில் அரசு விழாவாககொண்டாடப்படும்என்று அறிவித்துள்ளார்.

அடக்கப்பட்ட இன மக்களின்அடையாளத்தையும், சுயமரியாதையையும்நிலைநிறுத்த ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களை அணி திரட்டி இறுதி மூச்சு வரை அடிபணியாமல் போராடிய தீரர் தியாகி இமானுவேல் சேகரனார் என்று தொடர்ந்து முழங்கி வரும் மக்கள் விடுதலை கட்சியின் முழக்கத்தை ஏற்று அவரின்புகழைப்பறைசாற்றுகிற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசின் தலைமகன் இந்திய நாட்டிற்கு சமூகநீதி தளத்தில்வழிகாட்டும்கலங்கரை விளக்காக திகழும் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறுகாலகட்டங்களில் எமது தொடர்கோரிக்கைகளை ஏற்று தியாகி இமானுவேல்சேகரானார் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில்பலகாரியங்களை செய்துள்ளார்கள்.

அதில் குறிப்பாக 2018 ஆம்ஆண்டுஎதிர்கட்சிதலைவராக இருந்த காலகட்டத்தில் தியாகி அவர்களின் நினைவிடம் அமைந்துள்ள பரமக்குடிக்கு தளபதி. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி தியாகியாரின் நினைவிடத்திற்கு வருகை தந்த முதல் எதிர்கட்சி தலைவர் என்ற பெருமையை ஏற்படுத்தினார்கள்.தொடர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு அமைச்சர் உதயநிதிஸ்டாலின்அவர்களையும், நாடாளுமன்ற தி.மு.க தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களையும், ஏனையபிறஅமைச்சர்பெருமக்களையும்பெருமக்களையும் தொடர்ந்து தியாகியாரின் நினை விடத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர்11ஆம்நாள்அனுப்பி வைத்துமரியாதைசெய்துவருபவர் நமது முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

எமது மக்கள் விடுதலைக் கட்சியின் 30 ஆண்டு கால தொடர் கோரிக்கையான தியாகி இமானுவேல் சேகரனாருக்கு முழுஉருவ வெண்கலச் சிலையுடன் கூடிய மணிமண்டபம், தியாகியாரின்நினைவைப்போற்றுகிற வகையில் அவரது பிறந்த நாள் அல்லது நினைவு நாள் அரசுவிழாவாகமுன்னெடுக்கப்பட வேண்டும்என்பதை நாங்கள் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் தோழமைக்கட்சி என்ற அடிப்படையில்வலியுறுத்தி வந்தோம்.

எங்களது கோரிக்கையை ஏற்றுசென்றஆண்டு3கோடி ரூபாய் மதிப்பில் பரமக்குடியில் தியாகியார் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்படும்.என்றஅறிவிப்பை செய்து அதற்கான அடிக்கல்லையும், நாட்டியவர். நமது முதல்வர் தளபதி. மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்பொழுது இன்னும் ஒரு படி மேலே போய் தியாகியார் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர்09ல் இராமநாதபுர மாவட்ட அளவில் அரசுவிழாவாக கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்திட செய்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்மிகப்பெரும்சமூக நீதி சரித்திரத்தை படைத்துள்ளார்.

இந்நேரத்தில் நான் மக்கள் விடுதலைக் கட்சியின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு தபால் தலைவெளியிடப்பட்டதும் திமுகஅங்கம்வகித்தமத்திய காங்கிரஸ் ஆட்சியில் தான் என்பதையும் நான் நினைவு கூரகடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த ஒப்பற்ற சாதனையை நான் உள்ள உவகையோடு வரவேற்று மகிழ்கிறேன்.தமிழ்நாட்டில் வாழும் கோடானு கோடி தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் சார்பாகவும், மற்றும் மக்கள் விடுதலைக்கட்சி தொண்டர்கள், பொறுப்பாளர்கள்சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும்தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்குதெரிவித்துக்கொள்வதோடு நானும், மக்கள் விடுதலைக்கட்சியும், ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களும், முற்போக்கு இடதுசாரி முன்னனியினரும் என்றும், திமுக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உறுதுணையாக தோளோடு, தோள்நிற்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சு.க.முருகவேல்ராஜன்தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


### நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில்

# 2024-25ஆம் நிதி ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல்!

## மேயர் ரெ.மகேஷ் தலைமையில்!

நாகர்கோவில், ஜூன் 29-

நாகர்கோவில் மாநகராட்சி, மாமன்ற கூட்ட அரங்கில் 2024-25ம் நிதி ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் மாமன்ற கூட்டம் 27.06.2024, வியாழக்கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 2024-25ம் நிதியாண்டுக் கான நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா மாநகராட்சி மேயர் ரெ. மகேஷிடம் வழங்கினார். அதனை மாநகராட்சி மேயர் மாமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்தார். கூட்டத்தில் நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சியில் வருவாய் மற்றும் மூலதன நிதியாக இந்த ஆண்டு ரூ.147.81 கோடி, குடிநீர் வடிகால் மூலதன நிதியாக ரூ. 53.08 கோடி என்று ரூ. 200 கோடியே 99 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. அதுபோன்று வருவாய் மற்றும் மூலதன செலவினம் ரூ. 155.98 கோடி, குடிநீர் வடிகால் செலவினம் ரூ. 54.65 கோடி என மொத்தம் ரூ. 210.61 கோடி செலவினமாக உள்ளது. இதன்படி பற்றாக்குறை ரூ. 9.62 கோடி ஆகும்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர பகுதியில் குடிநீர் திட்டப்பணிகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தொடர்பாக உள்ள புகார்கள் மற்றும் 52 வார்டு மாமன்ற உறுப்பினர்களும் அவரவர் வசிக்கும் பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் பதிக்காத இடங்களையும் பட்டியலிட்டு மாநகராட்சி ஆணையரிடம் கொடுக்க வேண்டும். மாநகராட்சி ஆணையர் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரியிடம் அந்த பட்டியலை கொடுத்து குடிநீர் இணைப்பு வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்வார். அதனை தொடர்ந்து மாநகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் “இந்தியா” கூட்டணிக்கு 40-க்கு 40 இடங்களில் வெற்றியை பெற்று தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மன்றம் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.